Individual file

பதிவஞ்சலில்/
ஒப்புகை அட்டையுடன்

பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

மே.எ.எண்.9423/கே2/2017 நாள்.23.10.2019

அரசாணை (2டி) எண்.68, வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை, நாள்.15.10.2019 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.க.அஜிதா, இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள காரைக்குடி மாவட்டப் பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப காரைக்குடி மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

ஒம்./-23.10.2019
பதிவுத்துறைத்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

/ஆணையின்படி/

25/10/19
மாவட்டப்பதிவாளர்

25/10

பெறுநர்:
திருமதி.க.அஜிதா, இளநிலை உதவியாளர்.
(காரைக்குடி மாவட்டப் பதிவாளர் மூலம்)

நகல்:
1.மாவட்டப் பதிவாளர், காரைக்குடி.
(S.S.L.C. அசல் மதிப்பெண் சான்றுகள்-
1.பதிவு எண்.099285/ஏப்ரல் 2004
2.பதிவு எண்.308150/ஜூன் 2004)
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்.
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – காரைக்குடி பதிவு மாவட்டம் – திருமதி.க.அஜிதா – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – தொடர்புடைய சட்டப் பிரிவுகளை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை

அரசாணை (2டி) எண்.68

நாள் 15.10.2019
விகாரி, புரட்டாசி 28
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்கப்பட்டது :

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.54619/கே2/2016–8, நாள் 08.12.2017.
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண். 9423/கே2/2017, நாள் 20.02.2019.
3. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு1) துறை, நாள் 21.04.2017.

******

ஆணை:–

பதிவுத்துறையில் காரைக்குடி பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 02.05.2016 அன்று மரணமடைந்த பி.கங்கேஸ்வரன் என்பவரின் மனைவி திருமதி.க.பாரதி என்பவர் தனது மகள் திருமதி.க.அஜிதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 08.02.2017 அன்று மனு அளித்தார். அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி திருமதி.க.அஜிதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக காரைக்குடி பதிவு மாவட்டத்தில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திருமதி.க.அஜிதா 18.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திருமதி.க.அஜிதா, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பார்வை மூன்றில் காணும் அரசாணையில் இறந்த அரசுப்பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணையடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவு 15–ல் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

3. இந்நிலையில், பதிவுத்துறைத் தலைவரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், பதிவுத்துறையில் காரைக்குடி பதிவு மாவட்டத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.அஜிதா என்பவர் ஏற்கனவே திருமணமானவர்

என்பதனால் அவரின் தற்காலிகப் பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 18.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணித்தரத்தில் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, அவர் பொருட்டு 2016–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 58–ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்படி சட்டத்தின் பிரிவு 15 மற்றும் பணப்பலன்களுடன் தனியரின் பணியினை முன்தேதியிட்டு வரன்முறை செய்வதற்கு ஏதுவாக மேற்படி சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றினைத் தளர்த்தி 18.12.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.18528/ட்டி1/2019, நாள் 30.09.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.32980/ஜி2/2019–1, நாள் 09.10.2019 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. பாலச்சந்திரன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

திருமதி.க.அஜிதா, இளநிலை உதவியாளர்,
காரைக்குடி பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 (இணைப்புகளுடன்)

<u>நகல்:</u>

தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(ட்டி1)த்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

16/10/19

பிரிவு அலுவலர்

16/10/19